# யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்



## சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை - 2011

# ஈழத்தமிழ்ச் சூழலில் நவீனமயவாக்கமும் இலக்கியத்தினூடான அதன் வெளிப்பாடுகளும்

**பேராசிரியர் செ.யோகராசா M.A., Ph.D,**
கலை கலாச்சாரப் பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

**07.10.2011**

சீமாட்டி லீலாவதி இராமநாதன்

நினைவுப் பேருரை

07.10.2011

# ஈழத்தமிழ்ச் சூழலில் நவீனமயவாக்கமும் இலக்கியத்தினூடான அதன் வெளிப்பாடுகளும்


பேராசிரியர் செ.யோகராசா, M.A, Ph.D

கலை கலாச்சாரப்பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம்,

இலங்கை.

•தலைப்பு : ஈழத்தமிழ்ச் சூழலில் நவீனமயவாக்கமும், இலக்கியத்தினூடான அதன் வெளிப்பாடுகளும் • ஆசிரியர் : பேராசிரியர் செ.யோகராசா • ©: ஆசிரியர்.
•பக்கம் : 28 •அச்சிட்டோர்: கரிகணன் பிரிண்டேர்ஸ், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
• வெளியீடு : யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். 07.10.2011

# துணைவேந்தரின் செய்தி

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மரபில் ஒன்றான சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரைக்கு இச்செய்தி வழங்குவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

லீலாவதி எனும் பெயர் கொண்ட செல்வி R.L.ஹரிசன் ஆன்மிக நாட்டம் கொண்டு அவுஸ்ரேலியாவிலிருந்து இங்கு வந்தவராவார். சேர்.பொன்.இராமநாதனைச் சந்தித்து அவரிடமே இந்துதர்மத்தினைத் தெளிவுறக் கற்றுக்கொள்ள முனைந்து ஒரு சைவப் பெண்மணியாக வாழ்ந்தார். செல்வி ஹரிசனின் அறிவாற்றலையும் சமய ஈடுபாட்டினையும் கண்ணுற்ற இராமநாதன் அவரைத் தமது அந்தரங்கச் செயலாளராக நியமித்தார். இராமநாதன் சொற்பொழிவாற்ற அமெரிக்கா சென்றபோது செல்வி ஹரிசனையும் அழைத்துச் சென்றார். அமெரிக்காவிலிருந்து திரும்பிய பின்னர் செல்வி ஹரிசனைத் திருமணம் செய்து கொண்டார்.

சேர்.பொன். இராமநாதனின் இலட்சியங்களுக்கும் சேவைகளுக்கும் பெரிதும் உதவியவராகவும், ஒத்திணைந்து வாழ்ந்தவராக விளங்கியவர் சீமாட்டி லீலாவதி அம்மையார். செயற்படுத்துவற்காகவும் யாழ்ப்பாணத்தில் சைவப்பண்பாட்டைச் சிறப்புற வளர்ப்பதற்காகவும் அரும்பாடுபட்டார். சைவ மங்கையர் வாழ்விற்கு வளம் சேர்க்கும் வகையில் கணவரால் நிறுவப்பட்ட சைவ மங்கையர் சபைக்குத் தலைவராக இருந்து பல பணிகளைச் செயற்படுத்திய பெருந்தகையாவார். அன்று அவர் பெற்றிருந்த சமூக மதிப்பின் காரணமாகவும் அவர் எழுதிய, பதிப்பித்த நூல்களின் காரணமாகவும் அன்றைய இலங்கைப் பல்கலைக் கழகம் இவருக்குச் சட்டக் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

27ஆவது பட்டமளிப்புவிழா நிறைவுற்ற இவ்வேளையில் "ஈழத்தமிழ்ச் சூழலில் நவீனமயமாக்கமும் இலக்கியத்தினூடான அதன் வெளிப்பாடுகளும்' எனும் தலைப்பில் பேராசிரியர் செ.யோகராசா

அவர்கள் நினைவுப்பேருரை வழங்கவுள்ளார். உலகமயமாதலினால் இன்று எம்மிடையே பல வகையான மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. எமது கலை, கலாச்சாரம் பண்பாடு அன்றாட நடவடிக்கைகள், உணவுப் பழக்கவழக்கம் எனப் பன்முகப்பட்ட விடயங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இந்தத்தலைப்பு மிகவும் பொருத்தமானதாக அமைகின்றது.

இந்த நினைவுப் பேருரையினைப் பேராசிரியர்களான க.கைலாசபதி, பொ.பூலோகசிங்கம், க.சதாசிவம் ஆகியோரின் மாணவரும், பேராசிரியர் வேலுப்பிள்ளை அவர்களின் முதுகலைமாணி மாணவரும், பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் வழிகாட்டலில் கலாநிதிப்பட்டம் பெற்றவருமான பேராசிரியர் செ.யோகராசா அவர்கள் ஆற்றுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இப்பேருரை அனை வருக்கும் ஆர்வத்தினை ஏற்படுத்துவதுடன் மேலும் பல ஆய்வுகளுக்குத் திறவுகோலாக அமையும் எனவும் நம்புகின்றேன்.

**பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்,**
துணைவேந்தர்.

# அறிமுகம்

**1. "நவீனமயவாக்கம்"**

நவீனமயவாக்கம் (modernization) என்பது சமூக அரசியல் பொருளாதார முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பதாக உள்ளது.

**2. ஈழத்தமிழ்ச் சூழலில் நவீனமயவாக்கம்:**

ஈழத்தமிழ்ச்சூழலில் மேற்குறிப்பிட்டவாறான மாற்றங்கள் ஏற் பட்டதற்கான காரணங்களாக அல்லது பின்புலமாக (i) ஆங்கிலேயரது காலனித்துவ ஆட்சியினால் ஏற்பட்ட மேற்கத்தைய மயவாக்கம் (westernization) (ii) உயர்ந்தோர் குழாத்தினரின் (Elites) செயற்பாடுகளும் சமூக அபிவிருத்திச் சங்கங்களின் செயற்பாடுகளும் (iii) இந்தியாவிற்கும் தமிழ் நாட்டிற்குமிடையிலான ஈழத்தமிழரது தொடர்புகள் அமைகின் றன. இவை பற்றிச் சுருக்கமாகவும் இவை சமகால இலக்கியங்களில் வெளிப்பட்டவாற்றினையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் பற்றி விரிவாகவும் அவதானிப்பது இவ்வாய்வின் நோக்கங்களாகின்றன.

**2.1. மேற்கத்தைய மயவாக்கம்**

ஐரோப்பாவிலே நவீனமயவாக்கம் ஏற்பட்டமைக்கு அறிவியல் கண்டுபிடிப்புகளும் கிறிஸ்தவ எதிர்ப்பு இயக்கமும் முக்கிய காரணங்களாக அமைந்தன என்றறிகின்றோம். ஈழத்தைப் பொறுத்தவரையில் அடிப்படையில் மேலைத்தேயத்தவரான ஆங்கிலேயரது காலனித்துவ ஆட்சியில் ஏற்பட்ட மேற்கத்தைய மயவாக்கம் முதன்மைக் காரணமாக அமைந்துள்ளது.

முதன் முதலாக இலங்கை முழுவதையும் ஓராட்சி முறையினுள் (1815) கொண்டு வந்த ஆங்கிலேயர் அதனைப்பலப்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். நிர்வாக முறை மாற்றங்கள், தீவிரமான கிறிஸ்தவ மதமாற்ற முயற்சிகள், ஆங்கிலக் கல்விமுறை அமுலாக்கம், நீதித்துறை மாற்றங்கள் (உ-ம்: "சட்டத்தின் முன் சமத்துவம்"), போக்கு வரத்துத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள், மத்தியதர வர்க்க உருவாக்கம், அச்சு ஊடக அறிமுகம், பத்திரிகைகளின் வரவு என்பன மேற்கூறிய பின்புலத்தில் முக்கியம் பெறுபவை ஆகின்றன.

ஈழத்தைப் பொறுத்தவரையில் புரட்டஸ்தாந்து மிஷனறிகளின் செயற்பாடுகள் குறிப்பாக ஈழத்தமிழ்ச் சூழலில் அமெரிக்க மிஷனின்

செயற்பாடுகள் நவீன மயவாக்கத்தின் முக்கிய பங்கு வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அமெரிக்க மிஷன், முக்கியமான மதமாற்ற ஊடகமாக கல்வியை பயன்படுத்தியிருப்பினும் அத்தகைய கல்வி முறைச் செயற்பாடுகளும் (உ-ம் அறிவியல் சார்ந்த பாடப்புத்தகங்களைத் தமிழில் எழுதுதல், மொழிபெயர்ப்பு முயற்சிகள், அகராதித் தொகுப்புகள்) பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பகுதியில் முதன்முதலாக நவீனமயவாக்கம் ஏற்பட வழிவகுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**2.2. உயர்ந்தோர் குழாத்தினரின் செயற்பாடுகளும் அபிவிருத்திச் சங்கங்களின் செயற்பாடுகளும்.**

ஈழத்தமிழ்ச் சூழலில் நவீனமயவாக்கம் ஏற்பட்டதில் ஆறுமுக நாவலர், சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணாசலம், பாவலர் துரையப்பாபிள்ளை, அறிஞர் சித்திலெப்பை கலாயோகி ஆனந்தகுமாரசாமி முதலான உயர் குழாத்தினரின் செயற்பாடு களும் கவனிப்புக்குரியன.

அதேவேளையில் வெவ்வேறு அபிவிருத்தி நோக்குடைய சங்கங்கள், சபைகள் ஆகியவற்றின் நடவடிக்கைகளும் நவீனமயவாக்கப் பின்புலத்தில் கவனத்திற்குரியவை. இவ்விதத்தில் சமூக சீர்திருத்த சபை (1901), யாழப்பாணத் தமிழ்ச்சங்கம் (1898), யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் (1920. 1930 ன் பின் இது யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் என மாற்றம் பெறுகிறது.), யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம் (1921), உபாத்தியாயர் சங்கம் (1906), கலாநிலையம் (1930) முதலானவற்றை உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இவற்றுள் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் அரசியல் நோக்கிலான செயற்பாடுகள் விசேட கவனத்திற்குரியவை.

**2.3. இந்திய, தமிழகத் தொடர்புகள்:**

பொதுவாக இந்தியாவுடனும் குறிப்பாக தமிழ் நாட்டினுடனும் ஈழத்தமிழருக்கு இருந்த வலுவான தொடர்புகளும் ஈழத்தமிழ்ச் சூழலில் நவீனமயவாக்கம் இடம்பெறுவதற்கு வழிவகுத்திருக்கின்றன. இத்தகைய தொடர்புகள் (ி) தமிழ் நாட்டில் பணியாற்றுதல் (ிி) ஈழத்து இலக்கிய உருவாக்கத்தில் தமிழ் நாட்டுப் படைப்பாளிகள், தலைவர்கள் ஏற்படுத்திய பாதிப்புகள் (ிிி) இந்திய, தமிழ் நாட்டுத் தலைவர்கள், புலமையாளர் ஆகியோரது ஈழத்து வரவு என்ற விதங்களில் கவனிக்கப்பட வேண்டி யவை.

ஈழத்து அறிஞர்கள், பெரியார்கள் பலர் - ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, மல்லாகம்.வி.கனகசபைப்பிள்ளை, ஆ.முத்துத் தம்பிப்பிள்ளை, தி.த.சரவணமத்துப் பிள்ளை முதலானோர் - தமிழ்மொழி, இலக்கியம், நூற்பதிப்பு, ஆய்வு சார்ந்த தமது பணிகளை தமிழ் நாட்டிலிருந்தே ஆற்றியுள்ளனர். அத்தகைய பணிகளுள் பல நவீனமயவாக்கத்தின் அறுவடைகளேயாம். ஏனெனில் தமிழ்நாட்டில் வதிந்தமை காரணமாகவே அவை தொடர்பான நவீன சிந்தனைகள் பலவற்றை அவர்கள் உள்வாங்குவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன. இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்பவர் பாவலர் துரையப் பாபிள்ளை. லோகமான்ய திலகர், கோபாலகிருஷ்ணகோகலே, சித்தன் ரஞ்சதாஸ் முதலிய அறிஞர்களது அரசியல் ரீதியான செயற்படுகளும் சிந்தனைகளும் வெளிப்பட்ட வட இந்தியச் சூழலில், பம்பாய் மாநிலத்தில் பாவலர் துரையப்பாபிள்ளை சில காலம் ஆசிரிய உத்தியோகம் பார்த்தமை காரணமாகவே தேசம், சமூகம் பொருளாதாரம் சார்ந்த நவீன சிந்தனை களையும் செயற்திட்டங்களையும் பற்றி நன்கு அறிந்து கொள்வதற்கான அரிய வாய்ப்பு உருவாகியது என்று கருதப்படுகிறது.

காந்தியச் சிந்தனைகளும் (தீண்டாமை மதுபாவனை மிருகபலி, சுதேச உற்பத்திப் பொருட்களில் நாட்டம்) ஈழத்து நவீனமயவாக்கச் சூழலில் அதிக செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளது. ஈழத்து இலக்கிய முயற்சிகளில் சிறப்பாகக் கவிதைத்துறையில் பாரதியார் கவிதைகளின் தாக்கம் அளப்பரியது.

இந்திய, தமிழகப் பெரியார்கள், தலைவர்கள் பலரும் (உ- ம்: காந்தி, தாகூர்) ஈழத்துத் தமிழ்ப் பிரதேசங்களுக்கு அவ்வப்போது வருகை புரிந்தமையும் இங்கு இடம்பெற்ற சீர்திருத்தச் செயற்பாடுகள் உத்வேகம் பெற வழிவகுத்துள்ளன.

**3.0. இலக்கியத்தினூடான வெளிப்பாடுகள்:**

மேற்கூறிய பின்புலத்தில் உருவான நவீனமயவாக்கச் செயற் பாடுகள் வெளிப்படுத்துவதற்கு பழைய இலக்கிய வடிவங்களால் இயலாத நிலையில் நவீன இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதை, கட்டுரை முதலானவை பிறப்பொடுத்தன. மரபு வழிக்கவிதை நவீன கவிதையாக மாறுகின்றது. எனினும் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்து ஈழத்தமிழ்ச் சூழலில் நவீன கவிதை முகிழ்க்காநிலையில் மரபுக்கவிதை நவீன கவிதையின் சில கூறுகளை மட்டும் பெற்றுக்கொள்வதை அவதானிக்கின் றோம். வாய்மொழிப் பாடல் மரபும் புத்துயிர்ப்பு எய்துகின்றது.

மேற்குறிப்பிட்டவாறமைந்த இலக்கியங்கள் ஈழத்தமிழ்ச் சூழலில் நவீனமயவாக்கச் செயற்பாடுகளை மக்கள் மத்தியில் வெளிப்படுத்து வதிலும் சிந்தனை ரீதியிலும் உணர்ச்சி நிலையிலும் மாற்றங்களை எற்படுத்துவதிலும் எவ்வாறு செயற்பட்டு வந்துள்ளன என்பதனைக் கோடிட்டுக் காட்டுவதிலேயே இவ்வுரை முக்கிய கவனஞ் செலுத்து கின்றது.

**3.1. சமூக மாற்றங்கள்:**

சமூக மாற்றங்களைப் பொறுத்தவரையில் இக்கால இலக்கியங் களின் நோக்கம் சமூகச் சார்புடையதாக மாற்றங்காண்கின்றது. சமூகச் சார்பு என்பது ஆரம்ப நிலையில் சமூகச் சீர்திருத்தம் சார்ந்ததாக பரிமாணம் பெறுகின்றது. சமூகச் சீர்திருத்தம் என்பது சமூகக் குறைபாடுகளை இனங்காண்பதாகவும், சமூகத்தேவைகளை முன்வைப்ப தாகவும் இக்கால இலக்கியங்களிலே வெளிப்படுகின்றது.

சமூகக் குறைபாடுகள் என்று நோக்கும்போது (i) நீண்டகாலமாக நிலவிவந்துள்ள குறைபாடுகள், (ii) சமகால மாற்றங்களால் முகிழ்த்தெழுந்த குறைபாடுகள் என இரு நிலைகளில் அவை பற்றி அவதானிப்பது பொருத்தமானது.

ஈழத் தமிழ்ச் சமூகத்தின் நீண்டகாலக் குறைபாடுகள் என்கின்ற போது சாதிப்பிரச்சினை முக்கிய இடம் பெறுவது கண்கூடு. இத்தகைய சாதிப்பிரச்சினைபற்றி எழுந்த படைப்புகளுள் நாவல்கள் முதன்மை இடம்பெறுகின்றன. இவ்விதத்தில் நீலகண்டன் ஒரு சாதி வேளாளன் (இடைக்காடர் - *1925*), காந்தமணி அல்லது தீண்டாமைக்கு சாவுமணி (எச்.செல்லையா *1937*) செல்வி சரோஜா அல்லது தீண்டாமைக்குச் சவுக்கடி (எம்.ஏ.செல்வநாயகம் - *1938*) ஆகியவை குறிப்பிடத்தக்கன.

"நீலகண்டன் அல்லது ஒரு சாதி வேளாளன்" என்ற நாவலின் கதைப்போக்கு, வேளாள குலத்துப் புவி மன்னனுக்கும் பண்டார சாதிப்பெண் கமலாவதிக்கும் பிறந்த நீலகண்டன், தனது தந்தையின் சொத்துரிமையைப் பெறுவதற்குத் தடையேற்படட்டு தடைசெய்த தீயோரைத் தனது வீரசாகசங்களால் வெற்றி பெற்று முதலிப்பட்டம் பெற்று உயர்வாழ்வு வாழ்வது பற்றியதாக அமைகின்றது.

கவிதையைப் பொறுத்தளவில், தமது பாடல்களில் சாதிப் பிரச்சினை பற்றி முதன்முதல் பேசியவராக பாவலர் துரையப்பாபிள்ளை அமைகின்றார்.

எ-டு:

கீழ்சாதி யாரொரு போது முயர்ந்து
கிளர்ந்த நிலைக்கு வருதலின்றிப்
பாழாயிருக்க விடுதலெம் சாதியின்
பாதக மல்லவோ சங்கமின்னே (245)
தாயினும் புத்திரன் தான் சாதி மானெனச்
சாற்றிப் பெருமை கொள்ளிந் நாட்டில்
நேயம் பெருகி நம் சாதியின் ஐக்கியம்
நீடுதல் கூடுமோ சங்கமின்னே (248)

அண்ணனிலுந்தம்பி தான் சாதி மானென்
றைந்து திரிகின்ற விந்நாட்டில்
எண்ண வருமோவெக் காலத்தி லாயினும்
ஏற்ற நல்ல வைக்கியம் சங்கமின்னே. (249)

பாவலரைப் பொறுத்தவரையில் சாதிப்பிரச்சினைக்கான தீர்வு படிப்படியான சமூக மாற்றங்கோருவதாக காணப்படுகிறது. எ-டு

சாதியை ஒரே முறையினில் நம்மவர்
தள்ளுத லோமிகு கஷ்டகரம்
நீதியுடன் சிறிது சிறிதாயதை
நீக்குதல் நங்கடன் சங்கமின்னே (253)

முன்னரொவ் வோர் சாதியினுட் பிரிவுகள்
முற்றாக நீங்கப் பிரயத்தனம்
நன்னல மாய்ச் செயினல்லனு கூலங்கள்
நாளும் பெருகுமே சங்கமின் (254)

ஒவ்வொரு சாதியைச் சேர்ந்தவருஞ் சில
உத்தம மாகுங் கொண்டாட்டங்களில்
எவ்வகை யுமைக்ய மாகக் கொண்டாடிடில்
எய்தும் மிகுநலஞ் சங்கமின்னே (255)

பாவலருக்குப் பின்னர் நவீன கவிதை ஊற்றுக்கள் பரவலான வேளையில், சோமசுந்தரப்புலவர், சத்தியநாதன், ஆகியோர் கவனத்திற் குரியவர்களா கின்றனர். சோமசுந்தரப்புலவரின் ஏறாத மேட்டுக்கு இரண்டுதலை இவ்விதத்தில் கவனத்திற்குரியது.

சத்தியநாதனின் கவிதை சாதிப்பிரச்சினை தொடர்பாக தர்க்க ரீதியிலான வினாக்களை எழுப்புகின்றது :

எ-டு : தீண்டப்படாதாரென்று உலகில்
திசைமுகன் செய்த துண்டோ?
வேண்டப் படுவதீதோ ஐயோ
வீண்கதை பேசுகிறீர்
உரிமை உரிமையென்பீர் - உங்கள்
எளிய சோதரர் தங்கள்
உரிமை உரிமை என்றால் வேத
ஏடுவிரிப் போடுமென்பீர்

சாத்திரங்கள் கற்றீர் - நல்ல
சமயக்கலைகள் கற்றீர்
சூத்திரங்கள் கற்றீர் - போது
தூய உண்மை காண்பீர்

பண்டித ராவீரே யன்றிப்
பகுத்தறி வுடையராகீர்
நொண்டிக் குழந்தையைத்தூக்க
நூல்விதி பாரென்பதோ?

சிறுகதைகள் சாதிப்பிரச்சினை பற்றி அதிகம் பேசாவிடினும், ஆனந்தன் எழுதிய தண்ணீர்த்தாகம் அவ்விதத்தில் குறிப்பிடத்தக்க படைப்பு. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசச் சூழலில் முக்கியம் பெற்றிருந்த சாதிப் பிரச்சினையை முதன்முதலாக தண்ணீர்த்தாகத்தினூடாக சிறுகதைக்குரிய பொருளாகின்றது. தண்ணீர்த்தாகத்தினூடாக சிறு கதைக்குரிய பொருளாகின்றது. தண்ணீர்த்தாகத்தினால் வாடிய ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்த்த பெண்ணொருத்தி ஐயர் வீட்டுக் கிணற்றடியிலே விளக்கி வைத்த செம்பிலிருந்து குளிர்நீரை எடுத்துப் பருக முயல, ஐயர் ஓடோடி வந்து நெற்றியில் அடித்துவிடுகின்றார், இரத்தம் பீறிட்டுப்பாய அவள் ஓடி விடுகின்றாள். ஆண்டுகள் கழிய, நோய்வாய்ப பட்ட ஐயர் ஆஸ்பத்திரியில் தண்ணீர்த்தாகத்தினால் புலம்புகிறாள். ஒரு பெண் தாதி ஐயா பறைச்சி தொட்ட தண்ணீர் தந்தால் குடிப்பீர்களா? எனக் கேட்க ஐயர், "பிராமணனானாலென்ன, பறையனானதாலென்ன கொடிய மரண தாகம் நெஞ்சை அடைக்கிறது என்கிறார். அவள் யாரென ஐயருக்குத் தெரிகின்றது. "என் மரணதாகத்தை நீக்கிய கரங்களுக்காக அன்று இரத்தக்கறை ஏற்பட வேண்டும்?" என்றவாறு ஐயர் அவள்

காலடியில் விழ எழுந்தார். அக்காலச் சூழலில் இது புரட்சிகரமான உள்ளடக்கமே.

மேற்கூறியவை அனைத்து இலக்கிய வெளிப்பாடுகளும் கல்விகற்ற வாசகர்களுக்கே பயனாகின்ற சூழலில் ஈழத்தில் எழுந்த நாடக மேடைப் பாடல்கள் பொதுமக்கள் மத்தியிலே இப்பிரச்சினையை வலுவுடன் பிரச்சாரம் செய்வதாக வெளிப்படுவது விதந்துரைக்கற்பாலது.

இவ்விதத்தில் பொன்னாலை கிருஷ்ணபிள்ளை, கிருஷ்ண வாழ்வார் ஆகிய இருவரும் முக்கியமானவர்கள்! எடுத்துக்காட்டாக, பங்கை கொடி நாடகத்திலே பாறையறைவோனாக வந்து கிருஷ்ண வாழ்வார் பாடிய பின்வரும் பாடற்பகுதியைக் குறிப்பிடலாம்:

"............................
சாமியாடும்போது யாரையா? பறை
கொட்டிமு ழக்குவது யாரையா?
நீடிய வான்முடி சூடிய மன்னரும்
ஆடி அடங்கிடும் வேளையிலே
கூடி முழக்கிக் குடும்ப சமேதராய்
வாடி யமுவீரம் யானம் வரைக்கும்
செத்த பிணம் என்று சீ என்று தள்ளு நீர்
சீராளம்மிடம் தந்து நீறாக்கிறீர்
தீயை மூட்டுமுன்
ஓடுகிறீர் வீடு தேடுகிறீர் - அங்குத்
தேறி புசித்துக் கொண்டாடுகிறீவ்

நாயும் நரியும் பிடுங்காமல் பிணம்
நாற்றம் எடுத்து மணக்காமல்
அங்கம் நீறாக்குவது நாங்களோ வீணில்
அதிகாரம் செய்வது நீங்களோ?":

மேற்கூறிய நாடகப் பாடல் தொடர்பில் மன்னவன் மு.கந்தப்பு என்பார் பின்வருமாறு கூறியிருப்பது கவனத்திற்குரியது. "இப்படி ஒரு புலையன் அந்தக்காலத்தில் வசனமாகவேனும் பேசினால். நடந்திருப் பதுவேறு. நமது அண்ணாவியார் இப்படிப் பாடியபோது கைதட்டி ரசித்தார்கள்.."

நீண்டகாலப் பிரச்சினைகள் என்ற விதத்திலே சாதிப்பிரச் சினைக்கு அடுத்ததாக ஈழத்துப் படைப்புகளில் முக்கியத்துவம் பெற்ற

விடயம் பெண்களது முன்னேற்றமாகும். அதாவது தமிழ்ச் சமூகத்தில் நீண்டகாலமாக பெண்கள் எதிர்நோக்கி வந்த சவால்கள் பலவும் உணரப்படுகின்ற நிலைமை இப்போதுதான் உருவாகியது.

மேற்கூறிய பின்புலத்தில் ஈழத்துப் படைப்புகளில் முதன் முதலாக வெளிப்பட்டது பெண்களது திருமணம் சார்ந்த விடயமாகும். தமது பெண்பிள்ளைகளின் இசைவன்றி அவர்களது விருப்புகளுக்கு மாறாக பெற்றோரே பெண்களது திருமணத்தை பேசி முடித்து வந்த பாரம்பரிய மான வழக்கத்தின் குறைபாடுகள் தமிழில் முதன்முதலாக ஈழத்திலிருந்து வெளிவந்த தத்தை விடுதூது (தி.த.சரவணமுத்துப்பிள்ளை, 1892) என்ற நவீன பிரபந்தத்திலேயே பேசப்படுகின்றது. இப்பிரபந்தத்தின் பின்வரும் பகுதியை இங்கு எடுத்தாள்வது பொருத்தமானது:

கூட்டிற் பசுங்கிளிபோற் கோதையரை யெப்பொழுதும்
வீட்டி லடைத்து வைக்கும் விரகிலருக் கியாதுரைப்போம்
பூட்டித் திறந்தெடுக்கும் பொருளாகக் கருதினரோ
கேட்டோர் நகைப்பதுவுங் கேட்டிலரோ பைங்கிளியே
கிஞ்சுகவாய்ப் பைந்தொடி பாற் கிளத்தாய் பசுங்கிளியே (16)

கண்ணை மறைத் தேகொடுபோய்க் காட்டில் விடும் பூனையைப்போற்
பெண்ணை மனையடைத்து பின்னொருவர் கைக்கொடுப்பார்
கண்ணான்முன் கண்டுமிலர் காதலர் சொற்கேட்டுமிலர்
எண்ணாது மெண்ணி யிருந்தயர்வர் மங்கையர்கள்
இக்கொடுமைக் கியாது செய்வ திசையாய் பைங்கிளியே (19)

ஓரிருவன் றோர்பகலன் றுயிருள்ள நாளளவுங்
காரிகையா ருடன் வாழ்வார் கணவரே யாமாயின்
ஓரிறையு மவ்விருவருள்ள மதை வினவாதே
பாரிலே மணப்புரிவோர் பாதகர் காண் பைகிளியே
பாவை தனக் கிம்மாற்றம் பகர்வாய் பசுங்கிளியே (20)

தம்மனைக்கோர் பசுவேண்டிற்றாம்பலகாற் பார்த்திருந்தும்
பின்னுந் துணிவிலராய்ப்பேது றுதன் மாந்தர் குணம்
என்னே மணவினையே லமைப்பொழுதி லே முடிப்பார
சின்னப் பதுமைகொடு சிறார் செய் மணம் போலுமரோ
தெரிவையவட் கிம்மாற்றஞ் சீரகிளியே கூறுதியால்! (23)

பின்நாளில் பெண் விடுதலைக் கும்மி பாடி பிரபல்யமானவர் பாரதியார். அன்னராது பெண்விடுதலைக்கும்மியில் "தத்தை விடு தூது" வின் செல்வாக்குக் காணப்படுவதனை பேராசிரியர் க.கைலாசபதியும் இக்கட்டுரையாளரும் வெவ்வேறு ஆதாரங்கள் ஊடாக எடுத்துக்காட்டியுள்ளமை இவ்வேளை நினைவுகூரப்பட வேண்டியதொன்று.

யாழ்ப்பாணத்தில் நிலவிய சீதனப் பிரச்சினை பற்றி பாரதியார் "இந்தியா" பத்திரிகையிலே குறிப்பிட்டிருந்தாலும் ஈழத்துப் புனைகதைப் படைப்பாளர்கள் - பெண்கள் உட்பட - அவற்றை முதன்மைப்படுத்த வில்லை! இந்நிலையில் பாவலர் துரையப்பாபிள்ளை சீதன வழக்கத்தின் தீமைகள் பற்றி முதன் முதலாக க்ணடனஞ் செய்து பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது

"கல்வியின் அழகைப் பாராமல் - ஸ்திரீகளுக்காய்
கற்பு நெறி தன்னைத் தேராமல்
நல்லவளோவென்ன ஓராமல் - பணத்தை மாத்ரம்
நம்புகிறீர் அன்பு கூராமல்..."

என்பது அவனது கண்டனக்குரல்களுக்கொரு உதாரண மாகின்றது.

எடுத்தாண்டுள்ள பலபிரச்சினைகளுள் ஒன்றாக, சீதனப்பிரச்சினை பற்றி பேசுகின்ற நாவல் என்ற விதத்தில் துரைரத்தினம் நேசமணி (ம.வே.திருஞானசம்பந்த பிள்ளை) குறிப்பிடத்தக்கது.

விதவைகள் நிலை பற்றியும் ஈழத்துப் படைப்பாளர்கள் முக்கியப் படுத்தினாரல்லர். எனினும், சமகால தமிழ் நாட்டு எழுத்தாளர் "கு.ப.ரா" வின் செல்வாக்கினால் உந்தப்பட்ட ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளுள் ஒருவரான சி.வைத்தியலிங்கத்தின் சில சிறுகதைகள் விதவைப்பெண்களின் மனப்போராட்டங்களை வெளிப்படுத்த முற்பட்டுள்ளன. (உ-ம்: விதவையின் இதயம் 1942)

சமகால ஈழத்து நாவலாசிரியர்களுள் முக்கியமானவரான ம.வே.திருஞானசம்பந்தபிள்ளையின் துரைத்தினம் நேசமணி நாவலிலும் சீதனத்தால் ஏற்படும் பிணக்குகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், விதவை மறுமணம் என்ற சமூகச் சீர்திருத்தக் கருத்தை சீரணிக்க முடியாதவளான இந்நாவலில் வரும் வள்ளியம்மை இளம் விதவையான நேசரத்தினத்தை மருமகளாக ஏற்கும் நிலை ம.வே.திருஞானசம்பந்த பிள்ளையால் உருவாக்கப்பட்டுள்ளது.

சீதனப்பிரச்சினை தொடர்பான மேற்கூறிய இலக்கிய முயற்சி களைவிட பாராட்டிற்குரிய நெடும்பாடல் முயற்சியொன்று ஈழத்துக் குழூஉ இறையனார் என்பவரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறுவயதி லிருந்து தன்னை நம்பியிருந்த முறைப்பெண்ணொருத்தியை அவள் பெற்றோரிடமிருந்து சீதனங் கிடைக்காத சூழலில் கைவிட்டுவிட்டு, கொழுத்த சீதனத்துடன் இன்னொரு பெண்ணை மணக்கின்ற இளைஞன் பற்றியும் ஏமாற்றங் காரணமாக நெஞ்சு வலி வந்து மரணிக்கின்ற குறிப்பிட்ட பெண் பற்றியுமான கதைப்பாடலாக எழுந்தது சீதனக்காதை. குறிப்பிட்ட பெண்ணின் தந்தை சீதனஞ் சேர்ப்பதற்கு பட்ட கஷ்டங்கள் விரிவாக எடுத்துக்காட்டப்படுகின்றன. ஈழத்திலெழுந்த அங்கதப் பண்பு கொண்ட படைப்பாகவும் இது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"உலகத் தீரே உலகத் தீரே
நலமிகப் படைத்து நல்வள மிளிரும்
புவிதனிற் செல்வம் போற்றிப் பெருக்கி
நலிவிலா வாழ்வு பொலிவுன் வாழும்
உலகத் தீரே உலகத்தீரே
அன்னையீரே அன்னை யீரே
தந்தையிரே தந்தை யிரே"

என்ற அந்நெடும்பாடலின் ஆரம்பத்துடனேயே அங்கதச் சுவை யும் ஆரம்பித்து விடுகின்றது. (மேற்கூறிய பாடற் பகுதியின் ஆரம்பம் புறநானூற்றுப் பாடலொன்றின் ஆரம்பத்தைத் தழுவியிருப்பதும் அப்பாடல் பற்றி அறிகின்ற போதே இங்கே அங்கதச் சுவை மிகுதிப்படும் என்பதும் கவனிக்கற்பாலன)

குடும்ப நிலையில், ஆண்டாண்டு காலம் பெண்ணினம் அனுபவித்து வரும் துயரங்களை வெளிப்படுத்துகின்றதென்ற விதத்திலே நொறுங்குண்ட இருதயம் நாவல் (மங்கள நாயகம் தம்பையா, 1914) சிறப்பிடம் பெறுகின்றது. இதில் வருகின்ற "கண்மணி" என்ற பாத்திர உருவாக்கம் அதனை அடிப்படையாகக் கொண்டதே. கணவனது கொடுமைகளுக்குள்ளாகி இதயங் நொறுங்குண்ட கண்மணியை முதன்மைப்படுத்துவதாக நாவலின் தலைப்பும் அமைந்திருக்கின்றது.

மேற்கூறியவாறாக அமைந்துள்ள பெண்களது சமூக நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டிய அவசியம் உணரப்பட்ட நவீன சூழ்நிலையில் "பெண்கல்வி" என்பது அதற்கான தீர்வாகக் கருதப்படுகின்றது.

"பெண்கள் கல்வி முன்னிலும் பன்மடங்கு
பெருகிப் பரவுதல் சந்தோஷம்

வண்கலை கற்றிடும் பெண்களெம் வீட்டுக்கு
வாய்த்த நல் ரந்நங்கள் சங்கமின்னே"

"குண்டான் வழித்திடும் பெண்களுக்குக் கல்வி
கூடாதெனச் சொன்ன தக்காலம்
பண்டாய்ப் பறத்திடப் பெண்களெங் குங்கலை
பற்றுகிறராடி சங்கமின்னே"

என்கிறார் பாவலர் துரையப்பா பிள்ளை.

"பெண்கல்வி" தொடர்பாக இங்கு குறிப்பிட வேண்டிய சுவையான விடயமொன்றுள்ளது. பெண்கள் தொடர்பான அக்காலச் சீர்திருத்தக் கருத்துக்கள் அனைத்தும் அடிப்படையில் எத்தகைய கண்ணோட்டத்துடன் உருவாகியுள்ளன என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துவதாக பின்வரும் பாடற் பகுதி காணப்படுகின்றது :

வீட்டினிற் சீவிய மின்பம் நிறைந்து
விளங்குதற் கேற்ற சுகிர்தகலை
ஊட்டுதல் போதும் பீ.ஏ.எம்.ஏ.பட்டம்
உதவாது பெண்கட்குச் சங்கமின்னே (126)

நற்சுவை சேரு முணவு சமைத்திடல்
நாயகர் தங்கட் கிதம் புரிதல்
சொற்சுவை சேரநற்பாக்கள் புனைதல்
சுகிர்தம் பெண் கட்கடி சங்கமின்னே (128)

வீட்டு நடப்பிற் குரியநற் சாத்திரம்
விள்ளும் வயித்திய சாத்திரமும்
ஊட்டும் சமையலின் சாத்திரமும் பெண்கள்
ஓத வேண்டுமடி சங்கமின்னே (129)

தையல் பின்னல் சித்ரம் செய்யும் வகையொடு
சங்கீத சாகித்ய மா முயற்சி
மெய்யா லெம் பெண்களதம் வீட்டையின் பாக்க
மிகவுத விசெயுஞ் சங்கமின்னே (131)

பெண்களது இசைவின்றி நிகழ்கின்ற திருமணம் பற்றி ஈழத்தில் 1892ல் எழுந்த "தத்தை விடுதூது" பிரபந்தம் பேசியிருப்பது பற்றி ஏலவே கவனித்திருந்தோம். 1942 அளவிலே அப்பொருள் பற்றி ஈழத்திலெழுந்த

அனிச்சமலரின் காதல் (காரை நகர வே.தில்லைநாதன்) என்ற நாவல் அதே பிரச்சினைக்கு விவாகரத்தினை தீர்வாக முன்வைப்பது பற்றி இவ்வேளை குறிப்பிடுவதும் அவசியமாகின்றது! (சட்டப்படி விவாகரத்துச் செய்த அணிச்சமலர்தான் முன்பு விரும்பிய வாலிபனைத் திருமணம் செய்வதும் குறிப்பிடத்தக்கது?

ஈழத்தில் தமிழர் வாழ்கின்ற அனைத்துப் பிரதேசங்களில் மட்டுமன்றி, ஏனைய சமூகத்தினர் வாழ்கின்ற பிரதேசங்களிலும் முக்கியம் பெற்று விளங்கிய அக்காலச் சமூகப்பிரச்சினைகளுள் மது பாவனை முதலிடம் பெறுகின்றமை கண்கூடு.

மேற்கூறிய விடயம்பற்றி பாடல்களிலே முதன் முதலாகக் காரசாரமாகக் கண்டித்தவர் பாவலர் துரையப்பாபிள்ளை. பின்வருவன அன்னாரது பாடற்பகுதிகளுள் சில:

மதுபான மென்னுமம் மாநஞ்சை நம்தேச
மாந்தர்முற் நாய் நீக்க லின்றியதை
அதிகமா யின்னும் பருகுங் கொடுமை
அறைதற் கர்தடி சங்க மின்னே (324)

களளொடு சாராயம் விஸ்கி விறண்டி
கழறும் கின் பீர் அபின் கஞ்சாவென
விளிளும் பல் மஸ்துப்பா னங்களை நம்மவர்
வேண்டியே நிற்கிறார் சங்கமின்னே (325)

முற்காலத் திவ்வூரி னாண்களும் மஸ்து
முறையல்ல வென்று வெறுத்தனராம்
தற்காலத் திவ்வூரின் பெண்களி லும்பலர்
சாரு கிறாரதைச் சங்கமின்னே (327)

எங்களதே சத்திற் குடி யால் வருந்தீமை
யிம்மட் டென்ன வியலாது
சங்கங்கள் நாட்டியித் தீமையை முற்றும்
தடுத்திடுவாயடி சங்க மின்னே (329)

முற்குறிப்பிட்ட துரைத்தினம் நேசமணி, என்ற நாவல் கவனத்திற்குட்படுத்திய பிரச்சினைகளுள் மதுபானத்தால் வருங்கேடு, என்பதுமொன்றாகவிருப்பது, கவனத்திற்குரியது.

வாய்மொழி பாடல் மரபிலே வந்த புலவர் பலர் இவ்விடயம் பற்றி அதிகளவு பாடியிருப்பது இவ்வேளை வற்புறுத்தப்பட வேண்டிய தொன்று. மட்டக்களப்பு க.சின்னவப்புலவர் (1877 1962). மதுவிலக்கு என்ற தலைப்பிலே ஒன்று இதுவாகும்.

"கள்ளுக் குடித்து வெறிவந்த பின்பவர்
கச்சுப் பிச்சென்கிறாரே சில
பச்சடி போடு றாரே சிலர்
மச்சங்கள் வாங்குநாரே அது
எள்ளுப் பொரிபோல உள்ளுக்குச்
சென்றால் எல்லோரையும் வெருட்டும்"

மலையகம் சார்ந்த வாய்மொழிப்பாடல் மரபிலே முக்கியமான ஒருவரான கே.கே.எஸ்.ஜில் பாடிய குடியைக்கெடுத்த குடிகாரன் பாட்டு, அன்றைய காலப்பகுதியில் பிரபல்யம் பெற்று விளங்கியதொன்று. குடியால் வரும் தீமைகள் பற்றி ஆண்-பெண் உரையாடற் பாணியிலே விவரிக்கும் அப்பாடலின் ஆரம்பம் இவ்வாறமைகின்றது: -

**பெண்:**

என்ன சொன்னாலும் செவியில் ஏறலியே சாராயத்தை
முன்னும்பின்னும் யோசியாமல் மூன்று வேளை நீ முடிக்க
நான் சொல்லுவதைக் கேளு சீச்சீ நமக்குப் பிள்ளைகள் ஏழு

தொடர்ந்து குடியால் வரும் கேடுகள் பற்றிபெண் விளக்குவ தாகவும் ஆண் அவற்றைமறுப்பதாகவுமான உரையாடல் முறையில் பாடல்வளர்ந்து செல்கின்றது.

முன்னர் மலைநாட்டுக் கூத்துக்களிலே முக்கிய பாத்திரமாக வெளிப்படும் பபூன் பாடல்களிலும் இப்பிரச்சினை முதன்மை பெற்றி ருந்தது. பெயரறியாத பபூனொருவன் பாடிய பாடலின் ஒரு பகுதி:

"மணிக்க வத்தை தோட்டத்திலே
மயிருவத்தி கண்டாக்கையா
உருவோச அடகு வச்சு...
உருட்டுறாரே ஜின்நு போத்த....!"

தமிழ்ப் பண்பாட்டுன் தொடர்புபட்ட மதஞ்சார்ந்த பிரச்சினை களுள் கிறிஸ்தவ மிஷனரிகள் மேற்கொண்ட கிறிஸ்தவமயவாக்கம் மிக முக்கியமானதொன்று.

கிறிஸ்தவ மயவாக்கத்தின் எதிர்வினைகள் இரு விதங்களில் இலக்கியங்களில் வெளிப்பட்டுள்ளன.(ை) மதமாற்றத்தைத் தடுத்தல் (ைை) சைவசமயச் சீர்திருத்தம் என்பனவே அவையாகும்.

மதமாற்றத்தை தடுக்கும் முயற்சிகள் துண்டுப் பிரசுரங்கள், சைவ மேடைப்பிரசங்கம், சைவசமயப் பாடசாலைகள் நிறுவுதல் என்பனவற்றினூடே பெருமளவு இடம்பெற்றாலும் இலக்கியப் படைப்புகளிலும் அவை சிறப்பிடம் பெற்றுள்ளமை கவனத்திற்குரியது.

இவ்விதத்தில் மங்களநாயகம் தம்பையா, ம.வே.திருஞான சம்பந்தபிள்ளை ஆகியோரது நாவல்கள் முதன்மை பெறுகின்றன.

மங்களநாயகம் தம்பையா எழுதியவற்றுள் முற்குறிப்பிட்ட நொறுங்குண்ட இருதயம் (1914), அரியமலர் (1926) ஆகியவை கிறிஸ்தவ சமய பிரசாரம் முதன்மை பெறும் நாவல்களாகின்றன.

நொறுங்குண்ட இருதயத்தில், அன்பில்லாத கணவனால் கொடுமைப்படுத்தப்பட்ட கண்மணி என்பவள் கிறிஸ்தவ பாதிரியரொருவரின் இதமான போதனைகளால் அமைதியடைபவளாக கிருஷ்டிககப்பட்டுள்ளாள். இவ்விதத்தில் குடும்பப் பிரச்சினைகளுக்கு சமய வழியில் தீர்வு கிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கது. சன்மார்க்க சீவியத்தின் மாட்சியை உதாரணங்களூடாக உணர்த்தும் நாவலாக அரியமலர் வெளிப்படுகின்றது. (சன்மார்க்கம் என்பதன் பொருள் நாவலாசிரியரது நோக்கிலே கிறிஸ்தவ சமயம் தழுவிய வாழ்க்கை நெறியாகிறது!

ஞானச்சகோதரர் யோன்மேரி, அருந்தவக் கனிகள் என்ற தலைப்பிலே எழுதிய புனித சீலி (1927), அருமைநாதன் (1930), இதயரத்தினம் (1935) ஆகியவை நாவல்களும் கவனிப்பிற்குரியன. முற்கிறப்பிட்ட நாவல்களைவிட, இவற்றிலே கிறிஸ்தவ சமயப்பிரச்சாரம் பெருமளவு இடத்தைப் பிடித்துள்ளது!

சைவ சமயப்பிரச்சாரம் சார்ந்த நாவல்களை எழுதியவராக விளங்குபவர் ம.வே.திருஞானசம்பந்தபிள்ளை, “உலகம்பலவிதக் கதைகள் என்ற தலைப்பிலே இவரெழுதிய காசிநாதன் தேசமலர் (1924) கோபால நேசரத்தினம் (1926-27) துரைத்தினம் தேசமணி (1927-28) ஆகிய மூன்று நாவல்களும் அத்தகையனவே. எனினும், முதற்குறிப்பிட்ட நாவலே அவற்றுள் முதன்மை பெற்றிருக்கின்றது. இந்நாவல் கிறிஸ்தவ மிஷனரிமாரின் சமயப் பிரச்சார நோக்கினை கண்டிருப்பதோடு,

அக்காலப் பகுதியில் நிலவிய சமயப் போட்டிச் சூழ்நிலையையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

தமிழ் நாட்டிலும் கிறிஸ்தவர்களது தமாற்ற முயற்சி முக்கிய இடம்பெற்றிருப்பினும் (புதுமைப்பித்தன் எழுதிய புதிய கூண்டு என்ற சிறுகதை தவிர) தமிழில் இதனைக் கதைப்பொருளாக தேர்ந்தெடுத்த முதல்வராக ஈழத்தவரான ம.வே.திருஞானசம்பந்தபிள்ளையே கருதப் படுகின்றமை விதந்துரைக்கப்பட வேண்டியது.

மதமாற்றமுயற்சிகள் பற்றி விரிவாகவும் ஆழமாகவும் பேச, நாவல் வடிவம் அதிக வாய்ப்புகள் அளித்திருப்பினும் மத உணர்ச்சி முதன்மை பெறுகின்ற நிலையில் பாடல்களும் அவற்றிற்கு இடமளிப்பது வியப்பிற்குரியதன்று. கிறிஸ்தவ சமயப்பிரச்சாரம் செய்வதற்கு தமிழ் இசைப்பாடல் மரபு வாய்ப்பளித்திருக்கின்றது.

சைவசமயப்பிரச்சார பாடல் முயற்சிகளுள் முத்துக்குமாரக்க விராசர் எழுதிய தனிப்பாடல்கள் தனித்துவமானவை "கிறித்தவத்துக்கும் சைவத்துக்கும் நிகழ்ந்த பலப்பரீட்சையில் மதக்கோட்பாடுகள் மாத்திரம் பிரச்சினைக்குரியனவாய் இருக்கவில்லை. மக்களின் முழு வாழ்க்கை முறையும் மத அடிப்படையில் நோக்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதிக்குரிய முத்துக்குமார கவிராசர் இயற்றிய விருத்தப்பாக்கள் சில இப்பிரச்சினைகளைத் துல்லியமாகச் சித்திரித் துள்ளன." என்று ஓரிடத்தில் குறிப்பிடும் பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் இத்தொடர்பில் பின்வரும் பாடலை எடுத்தாள்வார்:

"நல்வழிகாட்டுவோம் உடு புடைவை சம்பளம்
    நானாநா ளுந் தருவோம்
நாஞ்சொல்வதைக் கேளும் என மருட்டிச் சேர்த்து
    நானமுஞ செய்து விட்டார்
மெல்ல மெல்லப் பிள்ளை வேலையிங்கில்லை நீர
    வீட்டினிடை போலமன்கிறார்
வேண்டிய தொரு கன்னியைக் கைக் கொண்டு
    வீட்டினிடை போமென்கிறார்
இல்லை நீ போவென்று தள்ளுவது போலுமே
    இனி எம்மை எம் உறவினோர
எட்டியும் பாரார்கள் கிட்டவும் வாரார்கள்
    ஏர் பூட்டி உழவுமறியோம்
அல்லவாம் இம்மைக்கு மறுமைக்கு நரகினுக்
    காளாகி மிக அழுந்தோம்

ஆபரா பரனே கிறிஸ்தவர்கள் எம்மை
அடுத்துக் கொடுத்தார்களே."

"மதமாற்றத்தை ஒட்டி எழும் பல்வேறு சமூக பண்பாட்டுப் பிரச்சினைகளையும் ஆத்மார்த்த, மன உளைவுகளையும் இப்பாடல் வெகுநுட்பமாக வெளிப்படுத்துகிறது." என்பதும் பேராசிரியர் க.கைலாசபதி அவர்களது கூற்றாகிறது.

முத்துக்குமார கவிராசர் எழுதிய ஞானக்கும்மி, யேசுமத பரிகாரம் என்பனவும் கவனத்திற்குரியனவே!

சைவசமயஞ் சார்ந்த பிரச்சாரங்கள் ஒரு புறமாக, கிறிஸ்தவ சமயப் பரம்பலும், அதனோடு நவீனமயவாக்க சூழலும் சைவ சமயம் சீர்த்திருத்தம் பெறுவதற்கு உந்தித்தள்ளின என்பது வற்புறுத்தப்பட வேண்டிய தொன்றாகின்றது. இவ்விதத்தில் ஆறுமுக நாவலர் மேற்கொண்ட சைவசமய சீர்திருத்த முயற்சிகள் பற்றி நாம் நன்கறிந்துள்ளோம்.

தமிழ்ப்பண்பாட்டு நடைமுறைகளில் நவீன மயமாக்கம் ஏற்படுத்திய மாற்றங்கள் முற்றிலும் புதியனவாக விளங்கின. இவை பெரும்பாலான படைப்பாளிகளின் கண்டனத்திற்குரியவாகின. எமக்குக் கிடைக்கின்ற இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு அவதானிக் கின்றபோது, நாவல் சிறுகதைகளைவிட, பாடல்களிலே பெருமளவு வேறுபட்ட முக்கிய விடயங்களுள் ஒன்றாக இவை விளங்குவது விதந்துரைக்கத்தக்கது.

நவீன கவிதை ஊற்றுக்களுள் முக்கியமானவரான பாவலர் துரையப்பாபிள்ளை இவ்விடயத்திலும் கவனஞ் செலுத்துகின்றார். குறிப்பாக, கல்விகற்ற வாலிபர்கள் பெரியோரை மரியாதை செய்யாமை யும் (கல்விகற்ற) "புதிய ஸ்திரீகள்," நாற்குணங்கள் அனைத்தையும் கைவிட்டு ஆண்-பெண் வித்தியாசமின்றி நடப்பதும் அவரால் கண்டிக்கப்படுகின்றன. ஆசாரங்களைக் கைவிடுவதற்கு காரணமாக கிறிஸ்தவ மயவாக்கத்தையும் அன்னார் காரணமாக்குகின்றார்.

சிறுவர்கள் தொடக்கம் இளைஞர்கள், யுவதிகள் வரையில் அவர்களது சுகாதாரப்பழக்க வழக்கங்களில் சிரத்தை கொண்டு இக்காலக் கவிஞர் பலர் பாடல்கள் பல புனைந்திருப்பதும் குறிப்பிடத் தக்கது "பிள்ளைப் பாட்டு" (1935) தொகுப்பும் மு.நல்லதம்பியின் இளைஞர் விருந்தும் இவ்வழி விதந்துரைக்கப்பட வேண்டியவை.

பாவலர் துரையப்பாபிள்ளை மத்தியதர வர்க்கத்தினராகி அரச உத்தியோகம் பார்ப்போரை கற்ற - உத்தியோகம் பார்க்கின்ற மத்திய வர்த்தகத்தினரது பண்பாட்டு மாற்றங்களை கண்டனஞ் செய்ய, மத்தியதர வர்க்கத்தினர் தவிர்ந்த ஏனையோரது பண்பாட்டு மாற்றங்களை சி.அகிலேசுவரசர்மா கவனத்திற்குட்படுத்துகின்றார். தற்கால நாகரீக வேடிக்கைப் பாக்கள் என்ற தலைப்பிலே தொடர்ச்சியான சிறு பிரசுரங்கள் அவரால் வெளியிடப்பட்டுள்ளமை இத்தகைய விடயத்திற்கு அன்னார் கொடுத்த முதன்மையை வெளிபப்டுத்துகின்றது உணவுப் பகுதி, ஆடையாபரணப் பகுதி, அலங்காரப் பகுதி, ஆலய தரிசனப் பகுதி முதலான தலைப்புகளிலே விரிவான முறையில் பண்பாட்டு மாற்றங்களை விமர்சிப்பதும் பொது மக்களைக் கவரக்கூடிய விதத்திலே பொது மக்களுக்குப் பரிச்சயமான மெட்டுக்களிலே அவற்றை எழுதியிருப்பதும் கும்மி, சிந்துப்பாடல் வடிவங்களைப் பயன்படுத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கன விடயங்களாகின்றன.

மேற்கூறிய விடயம் பெண்கவிஞர்களாலும் பாடப்பட்டிருப்து பலருமறியாததொன்று. எடுத்துக்காட்டாக, மயிலிட்டி ஞானாம்பிகை என்பவரியற்றிய மேலைத்தேய மதுபான வேடிக்கைக் கும்மி (மேலத்தேச குடிவகைகள் பற்றியும் போலித்தேசோபாரிகள் பற்றியும் மட்டுமன்றி) நவநாகரீகம் பற்றியும் எடுத்துரைக்கின்றது. நந்தேய நவநாகரிகம் என்ற தலைப்பிலே அன்னார் பாடிய பாடலொன்று மாதிரிக்காக இங்கே தரப்படுகின்றது:

“பாண் விசுக் கோத்து கொக்கோ கோப்பி
பருகிறார் மேலைத்தேயச் சிற்றுண்டியில்
வேணுவி தெல்லா மெடுத்துண் பதிலே
விரும்பி விட்டாரிப்போ பாருமடி”

ஈழத்துச் சமூக அமைப்பிலே ஏற்பட்ட முக்கியமான மாற்றங் களுளொன்று மத்தியதர வர்த்தகத்தினரின் உருவாக்கம் இத்தகைய மத்தியதர வர்க்கத்தினர் ஆட்சி ஏற்படுத்திய நிர்வாக முறையில் உத்தியோகத்தர்கள் என்ற விதத்திலே இணைத்துக் கொண்டனர். இப்புதிய உத்தியோக முறைகள் பற்றியும் புதிய உத்தியோகத்தர்கள் பற்றியும் அவற்றின் அவர்களின் நடைமுறை பற்றியும் குறிப்பாக கவிஞர்கள் கூர்மையாக அவதானித்து வந்துள்ளனர்.

ஆங்கில ஆட்சி நீதித் துறையில் முற்றிலும் புதிய மாற்றங்களை ஏற்படத்தியது. “சட்டத்தின் முன் அனைவரும் சமம்“ என்பது

சட்டமாகியது ஒரு புறமாக, அவ்வழியில் நீதி மன்றங்களின் உருவாக்கமும நீதிமன்றங்களோடு தொடர்புபட்ட பல்வேறு உத்தியோகத்தர்களும் முக்கியம் பெறுவது முக்கியம்பெற்றது. இவ்விதத்தில் ஈழத்தின் நவீன கவிதை ஊற்றுகளுள் ஒருவராகத் திகழ்கின்ற வே.இராமலிங்கம் இயற்றிய கோட்டுப்புராணம் முக்கியமானது. முழுமையாக இந்நூல் கிடைக்கா விடினும் இது கோட்டு நடைமுறைகள் பற்றி பேசுவதாக அமைந்திருக் கலாமென்று ஊகிக்கப்படுகின்றது. கவிஞர் பார்வையிலே கோடு கூத்துக்களரியாகத்தென்படுவதைப் பின்வரும் பாடல் வெளிப்படுத் துகின்றது:

"கோடோரு களரி யதிலுறுந் துரையோ
கூத்துப் பார்த்திருந்திடு மூப்பு
ஆடுறு குரங்கோ வழக்கர் களாவா
ரவையிடை யவைகளைக் கொண்டு
நாடொறு மாட்டுங் கயிறுதான் வழக்கு
நட்டுவப் பணிக்கனோ தரணீ
வாடிடுவாயிறு வளர்ப்பதற்கெடுத்த
வஞ்சனை வேடமென்றுணரே"

முற்குறிப்பிட்ட பெண் கவிஞரான ஞானாம்பிகையும் நீதிமன்றத் தோடு தொடர்புபட்ட யூரிமார் மீது தமது பார்வையை செலுத்தியுள்ளார்.

இதற்கு முன்னர் ஏறத்தாழ 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்துப் புலவரொருவரால் எழுதப்பட்ட (ஆண்டும் புலவர் பெயரும் இன்றுவரைக்கும் அறியப்படவில்லை) "உத்தியோக லகஷணக் கும்மி" யின் வரவு முக்கியமானது. இந்நூல் யாழ்ப்பாண மன்னர் காலத் தொடக்கம் ஆங்கிலரது ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு புகையிரதம் வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்படும்வரையான செய்திகளை வரலாற்று ஒழுங்கிலே விவரிக்கின்றது. ஆங்கிலரது ஆட்சிக் காலத்தைப் பொறுத்தவரையிலே யாழ்ப்பாணத்திலிருந்து ஏஜென்ட்மார் நீதிபதிகள், முதலியார்மார், விதானைமார் முதலியோரின் ஆட்சி முறைகளை விமர்சிக்கின்றது என்பதே எமது கவனத்திற்குரியது. பண்ணைப் பாலக்கும்பி (அகிலேஸ்வர சர்மா), அழகம்மா திருமண அலங்கோலக்கும்மி (கல்லடி வேலுப்பிள்ளை) ஆகியனவும் அத்தகைய கைங்கரியத்திலீடுபட்டுள்ளன!

இவர்களுக்குப் பிற்பட்ட கவிஞர்களுள் பாவலர் துரையப்பா பிள்ளை கவனதிற்குரியவர். உத்தியோகத்தர் இயல்புகள் பற்றியும் ஆசிரியர் உத்தியோகம் பற்றியும் குறிப்பிட்டு, தமிழ் உத்தியோகத்தர்

பற்றாக்குறையாகவுள்ள உத்தியோகங்கள் பற்றியும் (எ-டு: வைத்தியம் சமூகத் தேவைகள் விவரிக்கின்றார்.

சமூகச் சீர்திருத்த நோக்கின் இன்னொரு வெளிப்பாடாக உள்ள சமூகத் தேவைகள் என்ற விடயம் பற்றிக் கவனிக்க வேண்டியுள்ளது. தமிழ்ச் சமூகத்தின் தேவைகள் பற்றி முதன்முதலாக ஆழமாக சிந்திக்க முற்பட்டவர் பாவலர் துரையப்பாபிள்ளை. சமகாலத் தேவைகள் என்று அன்னர முக்கியமாக கருதுவனவற்றுள் "கிருஷ்கத்திலே மாற்றங்கள் மேற்கொள்ளல், கைத்தொழில்களில் நாட்டங் கொள்ளல், வர்த்தக நாட்டம், இலங்கைக்கொரு சர்வகலாசாலை, தாய்மொழிப்பற்று, மாண வர் கற்க வேண்டியவை, பெண்கல்வி, வைத்தியம், எஞ்சினியருத்தி யோகங்கள் அக்கறைகொள்ளல், புகைப்படமெடுத்தல் முதலான கலைகளைப் பயிலல் ஆரோக்கியமான வாழ்வு, தேசாபிமானம் முதலிய குறிப்பிடற்பாலன.

### 3.2. அரசியல் மாற்றங்கள்

நவீனமயவாக்கச் சூழலிலலே அரசியல்துறை சார்ந்து இலக்கியப்படைப்புகளில் வெளிப்பட்ட பிரதிபலிப்புகள் பற்றி அவதானிப்பது பயனுடையது.

இந்தியா போன்று ஆங்கிலேயரது காலனித்துவ ஆட்சிக்கு எதிரான விடுதலைப் போராட்டம் ஈழத்தில் ஏற்படவில்லை. அதேவேளையில் காலனித்துவ ஆட்சியை வரவேற்றுப் பாடிய கவிஞர்கள் இருந்துள்ளனர். தென்கோவைக் கந்தையாபிள்ளை பாடிய யோர்ச் மன்னர் இயன்மொழி வாழ்த்தும் சிறுவர் பாடல் போட்டிக்கு ஜே.கே.சீனி வாசம் எழுதிய தேச கீதமும் இதற்குச் சிறந்த சான்றுகளாகின்றன. தேச கீதத்தின் இறுதிப்பகுதி பின்வருமாறு முடிவதும் அது 1935ல் எழுதப்பட்டிருப்பதும் மனங்கொள்ளப்பட வேண்டியன:

"பாரதினில் ஐந்திலொரு
பாகமதை ஆளும் கிங்கிலிஷ
சீர் உறும் செங்கோல் இனிதெம்
தேசமிதி லேசிறக்க (திரு அருள்)"

ஆயினும் ஈழத்து தேசிய உணர்ச்சியின் குறிப்பிடத்தக்க முதல் முனைப்பு யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் முயற்சிகள் ஊடாக வெளிப்படுகின்றது. எனினும் இதற்கு முன்னரே பாவலர் துரையப்பா பிள்ளை தேசாபிமானம் பற்றி பேச முற்பட்டுள்ளார். "தேசாபிமானம்" அற்றோரைக் கண்டிப்பதாகவே அம் முயற்சி இடம் பெற்றுள்ளது.

டொனமூர் அரசியல் சீர்திருத்தம் வழங்கிய சர்வசன வாக்குரிமையுட்பட்ட ஏனைய சீர்திருத்தங்கள், காந்தி, பாரதி முதலான இந்திய தமிழகத் தலைவர்களின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் ஈழத்து கவிஞர்கள் மத்தியிலே தேசிய உணர்ச்சியை மூளச் செய்துள்ளன. இவ்வித்திலே வித்துவான வேந்தனார், அல்வையூர் மு.செல்லையா, "யாழ்ப்பாணன்" "சாரதா", புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை முதலானோரின் கவிதைகள் விதந்துரைக்கப்பட வேண்டியவை. இவர்கள் சிலரது கவிதைகளில் உணர்ச்சி தீவிரமான முறையில் வெளிப்படுவதும் கவனத்திற்குரியது. கொடிதாங்குவோம் என்ற தலைப்பிலே வேந்தனார் எழுதிய கவிதை இதற்கு உன்னதமான எடுத்துக் காட்டாகின்றது சான்றாக ஒரு பகுதி கீழே தரப்படுகின்றது:

"எங்கனிலங்கையும் ஆங்கிலேயரின்
இல்லமோ இது நல்லதோ
தங்களாட்சியை இங்கு நாட்டிடச்
சாற்றினற் - வழி மாற்றினார்

ஆளும் படைப்பெலன் ஆங்கிலேயர்க்கே
ஆவதோ நாங்கள் - சாவதோ
வாழுஞ் சுதந்திரம் மான மழிந்தினி
வாங்கியோம் - உயிர் - தாங்கிடோம்

ஆட்சிப் படைபெறு மாங்கில ராட்சியை
அஞ்சிடோம் - இனிச் துஞ்சிடோம்
மாட்சி கொளிலிலங்கை வாழச் சுதந்திரம்
வாங்குவோம் - கொடி தாங்குவோம்."

இத்தகைய தேசிய உணர்வு வெளிப்பாடு தொடர்பாக முக்கியமானதொரு விடயத்தைக் குறிப்பிட்ட வேண்டியுள்ளது. அதாவது, ஈழத்துக் கவிஞர்கள் இந்திய விடுதலையையும் "அது இலங்கைக்கான விடுதலையே" என்ற உணர்வுடன் மனமார வரவேற்றுப் பாடியிருக்கின் றனர். "ஈழத்தவர் பாரதத் தாயை மறக்கலாமா? என்று கேட்பது மட்டுமன்றி, அரசியல் நிகழ்ச்சிகளின் பதிவுகள், இந்திய விடுதலைத் தலைவர்களை வாழ்த்துதல் என்பன 1950 வரை ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் இடம்பெற்றுள்ளன. இதனாற் போலும் ஈழத்தமிழரது தேசிய உணர்ச்சியை இரட்டைத் தேசியம் என்று சிலர் குறிப்பிடுகின்றனர்.

ஆயினும், ஆங்கிலேயரது காலனித்துவ ஆட்சிச் சூழலில் அவர்களோடு காலனித்துவ ஆட்சியிலே பங்குகொண்ட இலங்கை அரசியல் தலைவர்கள் மீதும் மலையகக் கவிஞர்கள் சிலரால் வலுவான எதிர்ப்புக் குரல்கள் எழுப்பப்பட்டுள்ளமை கவனத்திற்குரியது. மீனாட்சி யம்மாளின் நடேசய்யரின் பல பாடல்களும் கோ.நடேசய்யரது சில பாடல்களும் இதற்கு சிறந்த சான்றுகளாக அமைகின்றன. இத்தகைய எதிர்ப்புக்குரலுக்கான பின்புலம் மலையகத்தில் குடியேறிய இந்தியத் தொழிலாளர்களை அக்கால அரசியல் தலைவர்கள் சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்குமுட்படுத்தியமையாகும்.

மீனாட்சியம்மாள் நடேசய்யரின் தொகுப்பு (1940) இந்திய தொழிலாளர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை என்ற பிரதான தலைப்பையும் இந்தியரை விரட்ட வேண்டும் என்கிற இலங்கை மந்திரிகளுக்கு எதிர்ப்பு" என்ற உபதலைப்பினையும் கொண்டமைந் துள்ளமை கவனத்திற்குரியது. இதிலுள்ள பாடல்கள் பொது மக்களுக்கு நன்கு பரிச்சயமான மெட்டுக்களில் அமைகின்றன. "ஆடு பாம்பே" என்ற மெட்டிலமைந்த பாடலின் ஆரம்பம் இது:

**பல்லவி**

மந்திரிகளே மகா தந்திரிகளே வுங்கள்
மணம் போனபடி பேச்சை சிந்துகிறீர்களே

**அநுபல்லவி**

இந்தியர் இலங்கையில் இருக்கக் கூடியதாம் அவர்க்
கேற்ற சுதந்திரம் கொடுக்கக் கூடியதாம்

**சரணம்**

நீதியற்ற மநத்திா சபை நேர்மையைப் பாரு
நியாயமற்ற பஷபாத செய்கையைக்கூறு
எதினிமேல் சம்மாவிடில் ஏற்காது சீறு நாங்கள்
இந்த லங்கை ஆள் வேண்டாம் வேலையைப் பாரு! (மந்)

பொது மேடைகளில் மேற்கூறிய பாடல்கள் பாடப்பட்டுள்ளன. சில சந்தர்ப்பங்களிலே சிறு துண்டுகளிலே பாடல்கள் எழுதப்பட்டு தோட்டக் குடியிருப்புகளுக்குள் பரிமாறப்பட்டதாகவும் அறியப்படு கின்றது.

ஏறத்தாழ சென்ற நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்திலிருந்து ஈழத்தில் வகுப்புவாத உணர்ச்சி தலைதூக்கிய நிலையில் இரு இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை வலுவாக வற்புறுத்துகின்ற படைப்புகளும் வெளிவர ஆரம்பித்தமை இவ்வேளை கவனிப்பிற்குரிய தாகின்றது. இவ்விதத்தில் கவிதைகள் மட்டுமன்றி கதைப்பாடல், நாவல் முயற்சிகளும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடற்பாலது.

கதைப்பாடல் என்ற விதத்தில் சதாசிவ லீலா சரித்திரம் (சு.பொன்னம்பலம், 1929) என்ற நூலின் வரவு பலருமறியாதொன்று. தமிழ் இளைஞனுக்கும் சிங்களப் பெண்ணொருத்திக்கும் ஏற்பட்ட காதலுறுவு பலதடைகள் தாண்டி நிறைவேறுவதை எடுத்துரைப்பது அக்கதைப்பாடல்.

### 3. 3. பொருளாதார மாற்றங்கள்

நவீனமயவாக்கச் சூழலில் ஈழத்துப் பொருளாதாரத் துறையிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டமை பற்றி எடுத்துரைக்க வேண்டிய அவசியமன்று. இத்துறை சார்ந்த விடயங்கள் பற்றி ஈழத்து ஆக்க இலக்கியப்படைப்பாளர்கள் ஈழம் சுதந்திரம் பெற்ற பின்னரே சிந்திக்கின் றனர். ஆயினும் விதிவிலக்காக, ஒரு சில கவிஞர்கள் குறிப்பாக, பாவலர் துரையப்பாபிள்ளை முதலான மிகச் சிலர் தமது பாடல்களிலே ஈழத்துப் பொருளாதார முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிப் பேசியிருப்பது வியப்பிற்குரியதாகின்றது.

ஈழத்தமிழ்ச் சமூகத்தில் மத்தியதர வர்க்கத்தினருள் ஒரு சாராரே ஆங்கில ஆட்சியில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களை - கைத்தொழில் முயற்சிகள் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை முதலானவற்றை-வரவேற்றி ருப்பதாக ஊகிக்க முடிகின்றது. ஏனெனில் பாவலர் துரையப்பாபிள்ளை பின்வருமாறு பாடியிருப்பது இதற்குச் சான்றாகின்றது:

“எங்கள் நன் னாட்டினிற் கைத்தொழில் செய்வ
இழிவெனு மோர் பெரும் மோச வெண்ணம்
தங்கிச் செய் - தசெயுந் தீமையிம் மட்டெனது
சாற்ற வரிதடி சங்கமின்னே”

அத்தகைய “மோசவெண்ணம்“ கொண்டோரைக் கண்டனஞ் செய்கின்றார் பாவலர் துரையப்பாபிள்ளை. வர்த்தக முயற்சிகளும் அவரால் வரவேற்கப்படுகின்றன் அதேவேளையில் “கிர்ஷிக“ துறையில் புதிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்றும் கருதுகின்றார். இவை

பற்றி இரத்தினச் சுருக்கமாக பின்வரும் பாடல் வெளிப்படுத்து கின்றது.

“கைத்தொழில் கிர்ஷிகம் வர்த்தக மாமூன்று
காரண மேயெந்தத் தேசத்திற்கும்
மெத்திடு செல்வங் கொணரு மெனுமுண்மை
மீதுவிஸ் வாசம்வை சங்கமின்னே”

மு.நல்லதம்பி எழுதியவற்றுள், “கைத்தொழில்“ “ஊர்தோறும் கைத்தொழிற் சங்கம்“ முதலியனவும் இவ்விதத்தில் கவனிக்கப்பட வேண்டியனவாம். அதேவேளையில் இவரும் உழவுத் தொழிலை வரவேற்பவராகவே காணப்படுகின்றார்.

பாரம்பரிய முறையிலான விவசாயத்தை, நவீன உத்தியோக முறையுடன் ஒப்பிட்டு, விவசாயத்தின் மேன்மையைப் பாடுகின்ற போக்கும் கவிஞர் சிலரிடம் காணப்படுகின்றது. மு.செல்லையாவின் “புரட்சிப் பெண்“ “உழு கலப்பையும் எழுது பேனாவும்“ என்பன அத்தகைய படைப்புகளுக்கு ஏற்ற எடுத்துக்காட்டுக்களாகின்றன.

சுதேச உற்பத்திப் பொருட்களை (உ-ம்): பருத்தி : பனம் பொருள்) அவற்றிலீடுபடத் தூண்டும் வரவேற்று பாடல்களை எழுதும்போக்கும் இக்காலக் கவிஞர் சிலரிடம் காணப்படுகின்றது. “மனுப்புலியார்“ என்பவரது பாடல்களை இதற்குத் தக்க உதாரணங்களாகின்றன.

**4. முடிவுரை :**

தொகுத்து நினைவுகூர்கின்றபோது, ஈழத்துத் தமிழ்ச் சூழலில் நவீனமயவாக்கம் நிகழ்ந்த வேளையில் ஈழத்துத் தமிழ் இலக்கியங்கள் ஊடான அது சார்ந்த வெளிப்பாடுகளும் அவ்விதத்தில் அவை பெறுகின்ற முக்கியத்துவமும் இதுவரை கூறியவற்றினூடாக நன்கு புலப்படுகின்றது. மேலும் அத்தகைய சமகால இலக்கியங்களுள் கவிதையின் ஒரு கூறான பாடல்கள் முதன்மை பெற்றிருப்பதும் கவிஞர்கள், கும்மி வடிவங்கள், ஜனரஞ்சகமெட்டுகள், மேடைப்பாடல்கள், நாடகப் பாடல்கள், கூத்துப் பாடல்கள் ஆகியவற்றைப் பிரக்ஞை பூர்வமாக பயன்படுத்தியதனூடாக கற்றோரிடம் மட்டுமன்றி பாமரமக்கள் மத்தியிலும் நவீனமயவாக்கத்தின் வெளிப்பாடுகள் பரவியிருக்கும் என்பதும் தெளிவாகின்றது.



**பேராசிரியர் செ.யோகராசா M.A., Ph.D,**

செல்லையா யோகராசா கரணவாய்க்கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர், கொழும்புப் பல்கலைக்கழகத்திலே பேராசிரியர்கள் க.கைலாசபதி, பொ.பூலோசிங்கம், ஆ.சதாசிவம் முதலானோரிடம் தமிழ்ச் சிறப்பு நெறிக்கல்வியைப் பெற்றவர்.

முதுகலைமாணி ஆய்வை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையின் வழிகாட்டலிலும் கலாநிதிப்பட்ட ஆய்வைப் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் வழிகாட்டலிலும் மேற் கொண்டவர்.

சில வருடங்கள் பட்டதாரி ஆசிரியராகக் கடமையாற்றிய பின்னர் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகி உயர்ந்து தற்போது பேராசிரியராகக் கடமையாற்றுபவர்.

கல்லூரிக் காலத்தில் கருணை யோகன் என்ற பெயரிலே கவிதைகளும், சிறுகதைகளும் எழுதியிருப்பினும் தற்போது ஆய்விலும் விமர்சனத்திலுமே ஈடுபாடு காட்டுபவர். வெளிநாட்டு, உள்நாட்டு ஆய்வுக் கருத்தரங்குகள் பலவற்றிலே பங்குபற்றி வரும் இவர் ஏறத்தாழ 200 கட்டுரைகள், 50 ஆய்வுக் கட்டுரைகள், 08 நூல்கள், 06 தொகுப்பு நூல்கள், 02 பதிப்பு நூல்கள் ஆகியவற்றிற்கு உரித்துடையவர்.

ஈழத்து நவீன கவிதை புதிய உள்ளடக்கங்கள் - புதிய தரவுகள் - புதிய போக்குகள் நூலிற்காகத் தேசிய சாகித்தியப் பரிசிலையும் (2007) "பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை (2007, ஈழத்து நாவல் - வளர்ச்சியும். வளமும்" (2008) நூல்களுக்காகப் பிரதேச சாகித்திய பரிசில்களையும் (வடமாகாணம்) பெற்றிருப்பவர்.

Harikanan, Jaffna.